1 MAR 2010

சுருக்கம்

மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகள் மற்றும் தஞ்சாவூர், கரூர், பொள்ளாச்சி ஆகிய நகராட்சிகளுக்கு தமிழ்நாடு மின்சார வாரியம் செலுத்த வேண்டிய ஈடு செய் தொகையை முடிவு செய்யும் பொருட்டு அமைக்கப்பட்ட 12 நபர் குழுவின் பதவிக்காலத்தினை 01.11.2009 லிருந்து நீட்டித்தமைக்காக பின்னேற்பும், மேற்படி குழுவின் பதவிக் காலத்தை 01.11.2009 லிருந்து 31.5.2010 வரை நீட்டித்தும் அரசு ஆணை – வெளியிடப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை

அரசு ஆணை (நிலை) எண்.49 நாள் : 09.03.2010

படிக்க :

1) அரசு ஆணை (நிலை) எண்.252, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை, நாள் 12.12.2008.
2) அரசு ஆணை (நிலை)எண்.147, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை, நாள் 14.08.2009.
3) நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடித எண்.65442/07/இ1, நாள் நாள் 09.01.2010.

---

ஆணை :

முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகள் மற்றும் தஞ்சாவூர், கரூர் மற்றும் பொள்ளாச்சி நகராட்சிகளுக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தால் வழங்கப்படவுள்ள ஈடுசெய் தொகையை மூன்று மாத காலத்திற்குள் முடிவு செய்யும் பொருட்டு நகராட்சி நிர்வாக இயக்குநரின் தலைமையில் 12 உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும், இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், நகராட்சி நிர்வாக இயக்குநரின் தலைமையிலான 12 நபர் குழுவின் பதவிக்காலம் 12.3.2009ல் முடிவடைந்ததால், 13.3.2009 லிருந்து 31.10.2009 வரை குழுவின் பதவிக்காலத்தை நீட்டித்தும், மேலும், 13.3.2009 முதல் இக்குழு அரசின் பதவிக்கால நீட்டிப்பு ஆணை இன்றி செயல்பட்டமைக்கு பின்னேற்பு வழங்கியும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் மேற்கூறப்பட்ட குழு கூட்டத்தில், பல புதிய கருத்துக்கள் இரு தரப்பிலும் எழுப்பப்பட்டதாகவும், நகராட்சி அலுவலர் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலர்களும் கலந்து இது குறித்து இறுதி முடிவெடுத்து, அதனடிப்படையில் அரசுக்கு இறுதி அறிக்கை சமர்ப்பிக்க மேலும் இரண்டு அல்லது மூன்று கூட்டங்கள் நடத்த வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும், மேலும் மூன்று மாத காலத்திற்கோ அல்லது இறுதி முடிவெடுக்க ஆகும் காலத்திற்கோ, எது முன்னதோ அது வரையில் 12 நபர் குழுவின் கால அவகாசத்தை நீட்டிக்கவும் மற்றும் 31.10.2009 முதல்

அரசின் பதவிகால நீட்டிப்பு ஆணை இன்றி செயல்பட்டமைக்கு பின்னேற்பு வழங்கவும், 29.12.2009 அன்று நடந்த குழுவின் தீர்மானத்தில் அரசினை கேட்டுக் கொள்ளப்பட்டது என்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலித்து , அரசு ஆணை (நிலை) எண்.252, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நாந2) துறை, நாள் 12.12.2008–ன்படி அமைக்கப்பட்ட நகராட்சி நிர்வாக இயக்குநரின் தலைமையிலான 12 நபர் குழுவின் பதவிக்காலம் 31.10.2009 ல் முடிவடைந்ததால் இக்குழு 01.11.2009 முதல் அரசின் பதவிகால நீட்டிப்பு ஆணை இன்றி செயல்பட்டமைக்கு பின்னேற்பு வழங்கியும் மேலும் மேற்படி குழுவின் பதவிக் காலத்தை 01.11.2009 லிருந்து 31.05.2010 வரை நீட்டித்தும் அனுமதி வழங்கி அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி /

நிரஞ்சன்மார்டி
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –5.
ஆணையாளர், மதுரை மாநகராட்சி.
ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி .
ஆணையாளர், தஞ்சாவூர் நகராட்சி.
ஆணையாளர், கரூர் நகராட்சி.
ஆணையாளர், பொள்ளாச்சி நகராட்சி.
நிதி கட்டுப்பாட்டாளர்/ வருவாய், தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை–2
இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை, சென்னை –108.
கண்காணிப்பு பொறியாளர்,
அரசு தலைமையின் ஆய்வாளர் அலுவலகம், சென்னை–32.
உ தனிசட்ட ஆலோசகர்,
தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை–2.
நகல்
முதலமைச்சரின் செயலரின் தனிச்செயலர், சென்னை–9.
துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர்,சென்னை –9.
எரிசக்தி துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலரின்
தனிச் செயலர், சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு.II) துறை, சென்னை – 9.
இருப்பு/உதிரி நகல்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

சே. பூவதி அம்மாள் 09/3/10
பிரிவு அலுவலர்.